உ

ஸ்ரீவாணீ சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

**மாதப் பத்திரிகை.**

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௯. | 1918-ம் ௵ ஜூன் ௴ | இதழ் ௯.

## திருக்குறள் வியாசம்.

௯-ம் அதிகாரம்.

### விருந்தோம்பல்.

உள்ளுறை:—(1) விருந்தோம்பல் என்பது. (2) விருந்தோம்பலின் சிறப்பு. (3) விருந்தோம்புவார்க்கு இம்மைக்கண் எய்தும்பயன். (4) மறுமைப்பயன். (5) விருந்தோம்பாவழிப் படுங்குற்றம். (6) விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும். (7) முடிவுரை.

### விளக்கம்.

விருந்தோம்பலென்பது இருவகை விருந்தினரையும் புறந்தருதல் (உபசரித்தல்). இருவகை விருந்தினர், முன் அறிமுகமிருத்தலின் குறித்து வந்தாரும் அஃதில்லாமையின் குறியாது வந்தாருமாவர். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையோரை உபசரித்தலிலே, முன்னையவிரண்டும் கண்ணால் காணப்படாதவரை நினைந்து செய்வனவாதலாலும், பின்னையவிரண்டும் பிறர்க்குக் கொடுத்தலல்லாமையாலும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடையதாகி இல்லறங்கட்கு முதலாயிற்று.

விருந்தின் சிறப்பு விளம்புதற்கரிது. விருந்தினரை உபசரியாவிடத்து இல்வாழ்க்கையால் யாதொரு பயனும் உண்டாவதில்லை. ஒருவன் இல்லில் வாழ்தலும் பொருளைக் காப்பாற்றுதலும் எதன்பொருட்டு? 1. 'மனைவியோடுங் காட்டிற் செல்லாது இல்லினிடத்தே யிருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் செய்கையெல்லாம், விருந்தினரை உபசரித்து அவர்கட்கு உபகாரஞ் செய்தற்பொருட்டே' ஆகும். அங்ஙனம் உபகாரம் செய்யாவிடத்து, இல்லின்கண் இருத்தலும் பொருள் செய்தலும் காரணமாக வரும் துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனேயில்லை. ஆகலின் வந்த விருந்தினரைவிட்டு ஒருபோதும் உண்ணலாகாது. 2. 'உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னைநோக்கிவந்த விருந்தினர் தன்வீட்டின் புறத்து இருக்க, தானேயுண்ணுதல் விரும்பப்படும் முறைமை யுடையதன்று.

விருந்தோம்புவார்க்கு இம்மைக்கண் எய்தும் பயனே மிகப் பெரிது. 3. 'தன்னை நோக்கி வந்த விருந்தினரை நாடோறும் உபசரிப்பவனது இல்வாழ்க்கையானது வறுமையால் வருந்திக் கெடுதலில்லை.' நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனால் பொருள் குறையாது மேன்மேலும் வளரும். ஞானவொழுக்கங்களால் உயர்ந்த விருந்தினரைப் பாதுகாப்பவனுக்குச் செல்வம் வளர்ச்சி யடைவதற்கு என்ன தடை? அவன் செல்வம் நல்வழிப்படுகின்றதன்றோ. ஆகலின், 4. 'முகமினியனாய்த் தக்க விருந்தினரைக்காப்பவனது வீட்டின்கண், திருமகள் மனமகிழ்ந்து

---

1. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

3. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

4. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

வாழ்ந்துகொண்டிருப்பள்.' ஆகவே 5. 'முன்னே விருந்தினரை யுண்பித்துப் பின் மிகுதியைத் தானுண்பவனது விளைநிலத்திற்கு வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா.' அது தானே விளையு மென்றுணர்க.

விருந்தோம்புபவன் இம்மையில் மட்டுமா மேன்மை யடைகின்றனன்? மறுமைக்கண்ணும் மாட்சியடைகின்றனன். 6. 'தன்னிடத்தே வந்தவிருந்தை உபசரித்து, பின்வரும் விருந்தை யெதிர்பார்த்து, தான் அதனோடு உண்ண இருப்பவன், மறுபிறப் பிலே தேவனாய் வானிலுள்ளார்க்கு நல்ல விருந்தாவன்.' விண்ண வர்களால் மேன்மைப் படுத்தப்படுவன் என்க.

7. 'விருந்தினரை உபசரித்தலாகிய வேள்வியினது பயன், இன்ன அளவின தென்பதாகிய ஓரளவினையுடையதன்று; அவ் விருந்தினரது தகுதியளவே அதற்கு அளவாகும்.' ஏனெனின், பொருளளவு "தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்துவிடும்" அன்றோ? ஆதலின் விருந்தோம் பல், இம்மை மறுமையெனும் இரண்டையும் பயக்கு மெனற்கு யாதுதடை?

விருந்தினரைப் பாதுகாவாமை இல் வாழ்வானுக்குப் பெருங்குற்றமாகும். விருந்தோம்பாதவன் எய்திய பொருளை யிழப்பன். இழந்தபின் ஆதாரவற்றுத் தவிப்பன். அப் பொரு ளால் அவன் அடைந்தபயன் என்னை? வருந்திக் காத்த துன்பமே அவனுக்குப் பயனாகும். ஆதலின், 8. 'விருந்தினரை நிலையாப்

---

5. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

பொருள்கொண்டு உபசரித்து அவ்வேள்விப்பயனை அடையும் அறிவில்லாதவர், அப்பொருளை வருந்திக் காத்து, பின் அதனை யிழந்து, "இது பொழுது யாம் பற்றுக்கோடிலமாயினேம்" என்றிரங்குவார்.' மேலும், 9. 'பொருளுடையரா யிருக்குங்காலத்து வறுமையாவது, விருந்தோம்பலையிகழும் பேதைமையாம்; அஃது அறிந்தார்மாட்டு உண்டாகாது, அறிவில்லாதவரிடத்து உண்டாகும்.' எனெனின், அது பொருளாற் கொள்ளும் பயனை யிழப்பித்து உடைமையை இல்லாமையாக்குகின்றது. ஆதலின் அறியாமையால் விருந்தோம்பலை யிகழின், பொருள்நின்ற வழியும் அதனாற் பயனில்லையெனக.

இனி, விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும். எனெனின், தூரத்தே கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அதுபற்றி நெருங்கி வந்தவிடத்து இன்சொற் சொல்லுதலும், அதுபற்றி உடன்பட்டவிடத்து நன்கு உபசரித்தலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள், முதலாகிய முகமலர்ச்சி யில்லாதபோது வந்தவர் தூரத்திலிருந்தே வாடி நீங்குவ ரன்றோ? 10. 'அனிச்சப் பூவானது மோந்தாலன்றி வாடாது, விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்க வாடுவர்.' ஆதலின், விருந்தினரை உபசரிப்பவர்க்கு முதற்கண் முகமலர்ச்சி வேண்டுமென்று யாம் சொல்லவேண்டுமோ!

இதுகாறும் கூறியவாற்றால், இல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் விருந்தினரை உபசரித்தற் பொருட்டேயென்பதும், வந்த விருந்தினரைப் புறம் வைத்துத் தானுண்ணப்படா தென்பதும், விருந்தோம்புவான் வாழ்வு கெடுதலில்லை யென்பதும், அவன்வீட்டில் திருமகள் வசிப்பளென்பதும், அவனது விளைநிலம் தானே விளையுமென்பதும், விருந்தினரைப் பாதுகாப்பவன்

---

9. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

10. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

மறுபிறப்பில் விண்ணவனுவன் என்பதும், விருந்தோம்பல் இருமையும் பயத்தற்குக் காரணமென்பதும், விருந்தோம்பாதவர் பொருளை யிழந்து வருந்துவரென்பதும், செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை உபசரியாத மடமையென்பதும், விருந்தோம்புவார்க்கு முதற்கண் முகமலர்ச்சி வேண்டுமென்பதும் பிறவும் பெறப்பட்டன.

---

## புதுவைக் கலைமகள் கழகம்
## ௭-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம்.

தமிழ்ப்பயிர் வளர்க்கத் தலையெடுத்து நிலவும் கலைமகள் கழகத்தின் ௭-வது ஆண்டுவிழாக் கொண்டாட்டம், காலயுக்தி ௵ வைகாசி ௴ ௩௧௳ வியாழக்கிழமைமுதல் நான்கு நாட்கள் வரையில், புதுவையில், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையின்கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது. வழக்கப்படி, தெருக்களில், தமிழ் மணங் கமழும் வரவேற்பு வாக்கியங்கள் வரையப்பட்ட வளைவுகளும், விழாக் கொண்டாடும் சபையின் அலங்கரிப்பும், புதுவைக்குப் பேரழகுசெய்தன.

13-6-18. வியாழக்கிழமை காலையில் விக்கினேசுவர பூசை நடைபெற்றது. இரவு 7-மணிக்கு, கழகவிழாவின்பொருட்டு, தமது இட்டதெய்வமாகிய ஸ்ரீ வல்லிதேவ சேனுசமேத ஸ்ரீ சுப்பிரமண்ணியக் கடவுளோடு எழுந்தருளிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடத்துச் சுவாமிகளை, கழகத்தாரும் மற்றைய அன்பர்களும், கழகத்தினின்றும் மங்களவாத்தியத்தோடுசென்று எதிர்கொண்டு, மிக்கவைபவத்தோடு விழாக்கொண்டாடும் சபைக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

14-6-18. வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்குச் சபை கூடப்பெற்றது. கடவுள் வாழ்த்து நடைபெற்றதும், கழகத்தார் பிரார்த்திக்க, மகாசனங்கள் வேண்டுகோளின்படி, சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்து சபையை அலங்கரித்தருளினுர்கள். உடனே கழகத்தின் அங்கத்தினர் ஸ்ரீமான் து. இரத்தின சபாபதிப்பிள்ளை யவர்களால் வந்தனுேபசார பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பின், காரியதரிசி ஸ்ரீமான் தீ. திருப்புளிசாமி ஐயாவர்கள், கடந்த ஆண்டின் அறிக்கைப்பத்திரம் வாசித்து முடிந்ததும், அக்கிராசனுதிபதி யவர்கள் அமுதமழை பொழிவதுபோல் தமது முகவுரைப் பிரசங்கத்தைச் செய்தருளினுர்கள்.

பின்னர், புதுவை ஸ்ரீமான் A. ஜெகநாத நாயடு அவர்கள், "இனியவை கூறல்" என்பது பற்றியும், காஞ்சீபுரம் ஸ்ரீமான் சிவசாமி தேசிகர் அவர்கள், "அப்பரும், அருட்பாவும்" என்பது பற்றியும் உபன்னியசித்தார்கள். பிறகு அக்கிராசனாதிபதி யவர்கள் அன்றைய பிரசங்கங்களை எடுத்துப் பாராட்டி யாவரையும் களிப்புறச்செய்தார்கள்.

15—6—18. சனிக்கிழமை காலையில் மகேசுவர பூசை நடைபெற்றது. மாலை $4\frac{1}{2}$-மணிக்குச் சபைகூடிற்று. கடவுள் வாழ்த்து நடந்ததும், நத்தப்பட்டு ஸ்ரீமான் முத்துகிருஷ்ண ரெட்டியார் அவர்களால் "கம்பர் கவித்திறம்" என்பதும், திருக்கோவலூர் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிபிள்ளை அவர்களால் "உட்பகை யொதுக்கல்" என்பதும், சென்னை ஸ்ரீமதி கா. அலர்மேல் மங்கம்மாள் அவர்களால் "தாய்மார்களுக்கு எச்சரிக்கை" என்பதும் பிரசங்கிக்கப்பட்டன. பின்னர்ச் சபைதலைவரவர்கள் அப்பிரசங்கங்களை யாதரித்துத் தேன்மழை பொழிந்த திறம் எம்மனோர் இயம்புந் தரத்ததோ!

16—6—18. ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்குச் சபைகூட, கடவுள் வாழ்த்து நடைபெற, புதுவை செகரெத்தாரியா ஜெனெரால் ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியார் F. T. S. அவர்கள், "புலால் மறுத்தல்" என்பது பற்றியும், சென்னை ஸ்ரீமான் மோ. கந்தசாமி முதலியார் B-A. அவர்கள், "திருவடி" என்பது பற்றியும் உபன்னியசித்தார்கள். பின்னர், சுவாமிகள் அவ்வுபன்னியாசங்களின் நயங்களை எடுத்துப் பாராட்டி ஆநந்தமழை பொழிந்தார்கள்.

மாலை 4-மணிக்குச் சபைகூடிற்று. சென்னை, தொண்டைமண்டலம் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமான் இ. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் "ஒழுககம்" என்பதும், சென்னை ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம் பிள்ளை B-A., L. T., அவர்களால் "நமது முன்னேற்றம்" என்பதும், சென்னைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் தசரத. வே. இராமசாமி நாயடு அவர்களால் "மணிமேகலை" என்பதும், சென்னை ஸ்ரீமதி கா. அலர்மேல் மங்கம்மாள் அவர்களால் "புத்தகசாலைகளும், தேசோபகாரமும்" என்பதும் பிரசங்கிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் அப்பிரசங்கங்களின் அருமை பெருமைகளை எடுத்துப் பாராட்டி, தமது முடிவுரைப் பிரசங்கமாகிய அமிழ்த மழையைப் பொழிந்து யாவரையும் ஆநந்தக்கடலில் அமிழ்த்தியருளினார்கள். காரியதரிசியவர்களால் அக்கிராசனாதிபதியவர்கட்கும், உபன்னியாசகர்கட்கும், மற்றவர்கட்கும் வந்தனம்செலுத்தப்பட்டது. குறிப்பிடத்தகுந்த கனவான்கள் பலரும் வந்திருந்தார்கள். சென்ற ஆண்டுகளில் விட இவ்வாண்டுத்

திருவிழா யாவர் மனத்தையும் பெரிதும் கவர்ந்தது. கடவுள் வாழ்த்தோடு மங்களகரமாக, கலைமகள் கழகத்தின் ஏழாவதாண்டு விழாக் கொண்டாட்டம் சம்பூர்த்தியடைந்தது.

அக்கிராசனாதிபதி யவர்களையும், வெளியூர் உபந்நியாசகர் முதலிய அன்பர்களையும், மற்றவர்களையும் அன்போடு உபசரித்த சிவபுண்ணியச் செல்வர்களாகிய புதுவை ஸ்ரீமான் கிரந்தே - சிவசங்கரசெட்டியார் அவர்கள் அன்புடைமையும், அவர்கள் குடும்பத்தாரது அன்புடைமையும், வழக்கம்போல் இவ்வாண்டிலும் எடுத்துக் கொண்டாடத்தக்கதாகவே யிருந்தன. காரியதரிசிகளுடைய ஊக்கமும், தனரட்சகர் ஸ்ரீமான் மளிகை, ஸ்ரீநிவாச-அரங்கசாமி முதலியார் அவர்களுடைய நன்முயற்சியும் புகழுக்குரியன. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இக் கலைமகள் கழகம் என்றும் நின்று நிலவுக.

மாணிக்கவாசகன்.

---

## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் பிறந்தநாட் கொண்டாட்டத் திருவிழா.

### (ஜன்ம நக்ஷத்திரம்)

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் பிறந்த நாட் கொண்டாட்டத் திருவிழா, நிகழும் காளயுக்தி வருஷம் ஆனிமீ ௨௰௨ உ திங்கட்கிழமை, திருவிடைமருதூரில், வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று விடியற்காலம் மூன்றுமணி முதற்கொண்டே திருக்கோயிலில் உருத்திராபிஷேகம் நடைபெறத் தொடங்கிற்று. சிவாகம விதிப்படி மிக ஒழுங்குபெற நடந்த அவ்வபிஷேகம் கும்பாபிஷேகம் போலவே காணப்பட்டது. மகேசுவர பூசையும் பிராமண சமாராதனையும் மிக விமரிசையாக நடைபெற்றன. அன்று இரவு ஸ்ரீ மகாலிங்கேசுவரசுவாமிக்கு நடைபெற்ற உற்சவமோ அதுபோல் வேறெங்கும் பார்க்க முடியாதென்றே சொல்லவேண்டும். பூப் பல்லக்குகளும், புட்ப விமானங்களும் வெகு அருமையான வேலைப்பாடுகள் அமையப்பெற்று, கண்டவர் கண்களையும் மனங்களையும் கவர்ந்தன. அப் பல்லக்குகளிலும்

விமானங்களிலும் சுவாமியும் அம்பிகையும் மற்ற மூர்த்திகளும் எழுந்தருளின காட்சி காணத்தக்கதாகவே யிருந்தது. தெரு முழுதும் இருபுறத்திலும் வாஷிங்டன் விளக்குகள், ஒரே காலத்தில் பல சூரியர்களைக் கொணர்ந்து வரிசைபட நிறுத்தினாற் போன்று சிறிதும் குறைபாடின்றி விளங்கின. இத் தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற சங்கீதமேளங்களெல்லாம் அவ்வுற்சவத்தில் காணப்பட்டன.

மகா சந்நிதானம் மடாலயத்தினின்றும் மிக்க வைபவத்துடன் அன்பர்கள் புடைசூழப் புறப்பட்டுச் சுவாமி திருமுன் வந்து இளஞாயிறே போன்று எழில்கொண்டு விளங்கினார்கள். மகா சந்நிதானத்தின் திருமேனியின் பேரழகும், திருமேனியில் அணிந்துள்ள வயிரவொளிவீசும் உருத்திராக்க மணிவடங்களும், மார்பிலொளிரும் வயிரமணிப் பதக்கமும் அன்பர் விழிகட்குப் பெருவிருந்து செய்தன. தேசிக மூர்த்திகளைத் தரிசியாதவர்களெல்லாம் அன்று தரிசிக்கும் பேறு பெற்றார்கள். எழில் மலர்ச் சிவிகையில் இடைமருதீசர் இறைவியோடு எழுந்தருளின காட்சியும், சுவாமி திருமுன், உடுக்குழாத்திடையில் உவாமதியேபோல், அடியார் நடுவில், நடமாடும் பரசிவப் பிரபுவென்ன, மகா சந்நிதானம் நடந்துசென்றருளிய காட்சியுமே பார்க்கப் பார்க்கப் பரமானந்தமாயிருந்தன. உற்சவம் பார்க்கவந்த மக்கட்கூட்டம் அளவிடற்கரியது. 3000 ரூபாய்க்குமேல் அன்று செலவாயிருக்குமென்பது சனங்களின் மதிப்பு.

மகா சந்நிதானம் ஒவ்வொரு திருவிழாவையும் இவ்வண்ணமே வெகுசிறப்பாகவும் மிக ஒழுங்காகவும் நடத்தி அன்பர்களை ஆனந்தமுறச் செய்கின்றார்கள் என்று தெரிகிறது. மகா சந்நிதானத்தின் உதார குணத்தையும், நடத்துந் திறத்தையும் யாரே யெடுத்துப் புகழவல்லவர்! அன்பர்கள் உய்யக் கொண்ட அவர்கள் திருமேனி பூரணசுகத்தோடு நீடூழிநின்று நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனை யிறைஞ்சுகின்றேன்.

கண்டுகளித்தோன்.

# நாடகம்.

உலகத்தைத் தங்களுடைய இதோபதேசத்தால் நல்வழிப்படுத்த முன்வந்த பெரியோர்கள் கைக்கொண்ட உபாயங்கள் பலவற்றுள் நாடகமுமொன்று.

இராஜாக்கினைபோன்ற அறநூல்களையும், மித்திரோபதேசம் போன்ற புராணேதிகாசங்களையும், உற்சாகத்துடன் படித்து, தர்மமார்க்கங்களையும், சுகாதார நெறிகளையும், ஞானோபதேசத்தையு மடைவதில் உலக்ஜனங்களி லநேகர்க்கு ஊக்க மின்மையை யுணர்ந்து, ஒருமனப்பட்ட ஒண்டொடி மொழிபோன்ற காவியங்களை வெளிப்படுத்தினர் அப்பெரியார். இக் காவியங்களையும் படித்தறியமாட்டாத அதி பாமர ஜனங்களையும் நன்னெறிப்படுத்துவான்வேண்டி அக்காவியங்களை நடைநொடி பாவனைகளுடன் தக்க நாடக பாத்திரங்களால் நடித்துக் காட்டுவதன் மூலமாகத் தர்மோபதேசஞ் செய்வதைக் கடமையாகக்கொண்டனர் மற்றும் சில பெரியார்.

இந்நோக்கத்தால் அறிஞர்களால் வெளிவந்த நாடகங்களில் சிருங்கார ரசமே அதிகமாகக் காணப்படுதற்குக் காரணம் யாதெனில்,

சரீராரோக்கியத்தைத் தருகின்ற நல்ல மருந்துகளை யுண்பதில் மனங்கசந்து "நுண்மை நுகரேல்" என்னும் முதுமொழியை மறந்து, நோய்க்குத் தாயகமாகிய தீம்பண்டங்களையே நாள்தோறும் தின்ன மனமிசைந்துண்ணும் சிறுவர்களின் ஆரோக்கியத்தைக்கோரிய ஒரு நற்றாய், அச்சிறுவர்க்கு இஷ்டமான தீம்பண்டங்களிலேயே நல்லௌஷதங்களை மறைத்துவைத்துக் கொடுத்து அருந்தச்செய்து குணப்படுத்துவதுபோல, விஷயாதுரர்களாய்ப் பெரியார் வாக்கியங்களாகிய அறநூல்களையும், புராணேதிகாசங்களையும் படித்தறிவதில் மனமிசையாத கேவலம் பாமர ஜனங்களிடத்தில் கிருபையுடைய பெரியார்பலர், அவ்விஷயாதுரர்களுக்குப் பரமப் பிரீதியைச் செய்வதாகிய சிருங்கார ரசங்களால் மறைக்கப்பட்ட நன்னெறிகளை அந் நாடகங்களி லமைத்துவைத்திருக்கின்றனர். இதனைக் காளிதாசாதிகளா லியற்றப்பட்டுள்ள நாடகங்களை விவேக நேத்திரங்கொண்டு பார்த்தால் நன்கு காணலாம்.

ஆனால் தற்காலம் நாடகங்களை யியற்றுவோரும் நடிப்போரும், முற்காலத்துப் பெரியோர்களது நோக்கத்தைச் சிறிதும் பின் செல்பவர்களாய்க் காணப்படவில்லை. கேவலம் தம் சுயநலங் கருதியவராகவே காணப்படுகின்றனர். ஏதோ சில நாடகங்களில் சிற்சில நீதிவாக்கியங்கள் காணப்படினும் அவை எங்ஙனமிருக்கின்றதெனில், மறைத்துவைக்கப்

பட்டதன் குணத்தையுங் கெடுக்கத்தக்க தீம்பண்டத்துள் வைக்கப்பட்ட மருந்தைப்போல் பயன்படாமையோடு, ஜீவர்களுக்கு இயல்பா யமைந்துள்ள விஷயேச்சை அதிகப்படுத்துவனவுமா யிருக்கின்றன.

உலகமானது, ஐரோப்பாக் கண்டத்துள் தற்காலம் நடந்துவருகின்ற மகா யுத்தத்தாலும், காலமழையின்மையாலும் நேர்ந்துள்ள பஞ்சத்தால் சொல்லொணுக் கஷ்டங்களை யனுபவித்து வருகின்ற இக்காலத்து, நாடகக் கம்பெனியார் தம் நயமொன்றையே கருதிச் செய்துவரப்பட்ட சூழ்ச்சியால், கூலிவேலைசெய்து அன்றாடம் ஜீவனத்திற்கே போதாமல் கஷ்டப்படுகின்ற ஏழை ஜனங்களும் தம்முள்நின்று தூண்டுகின்ற விஷயேச்சையை எதிர்க்கச் சக்தியின்றி நாடகம் பார்ப்பதினுல், தம்பொருளுக்கும், புத்திக்கும், சரீராரோக்கியத்துக்கும் உண்டாகின்ற தீமையைச் சிறிதும் ஓராது, ஒவ்வொருநாளும் நாடகம் பார்ப்பதற்கென்று சிறுகச் சிறுகப் பெரும்பொருள் செலவுசெய்து நஷ்ட மடைகின்றனர்.

விஷயதரிசனத்தால் ஜீவர்கள் இயல்பாகவே அவ்விஷய பரவசராதல் கண்கூடு அங்ஙனம் தரிசனமாத்திரத்தால் ஜீவர்களைத் தம் வயப்படுத்துகின்ற விஷயங்களுள் ஸ்திரீ ரூப விஷயம் பலமானதென்பது யாவர்க்கும் சொல்லாமலே விளங்கியிருப்பது. அதிலும் நடை யுடைநொடி பாவனைகளால் மயக்கும் ஸ்திரீதரிசனம் மிகப் பிரபலமானது. இதனுேடு சிற்றின்பப்பாடலும் சேர்ந்துவிட்டால், ஜீவர்களை அதிலும் விட ஸ்திரீ புமான்களை அது ஆட்டிவைக்குங் கூத்துக்கு அளவு சங்கையுமுண்டோ! இங்ஙனமாகச் சமர்த்துள்ள ஒரு புருடன் பெண்வேடம் பூண்டு தன்னைப் புருடனென்றே பிறரறியாவண்ணம் நடித்துத் தன்னையொத்த புருடர்களைச் சிற்றின்பக்குழியி லமிழ்த்தக் கங்கணங்கட்டிக்கொண்டால், அதற்குள்ள செல்வாக்கைச் சொல்லவும் வேண்டுமோ! இங்ஙனம் பெண்வேடம் பூண்டு தம்மையொத்த புருடர்களைப் பெண்போக வலையிற் சிக்கி யுழலும்படி தூண்டும் புருடர்களின் செய்கையெங்ஙன மிருக்கின்றதெனில், தம்மினத்தாரைப் பகைவர்பாற் படுத்திக் கெடுக்கின்ற சுவஜன விரோதிகளாகிய உட்பகையாளர்களது செய்கையையே யொத்திருக்கின்றது.

இத்தகைய நாடகம் பார்த்ததால் மதியிழந்து தம்குடும்ப கௌரவத்தையும் பாராமல் சிற்றின்பப் பாழ்ங்கும்பியிலாழ்ந்து எத்தனையோ சிறுவர்களும் சிறுமிகளும் கேடுற்றனர். ஒரு கௌரவமுள்ள பிராமணக் குடும்பப் பெண் ஒருத்தி இரண்டு வருடத்துக்குமுன் ஒருரில் பெண் நாடகப்பாத்திரங்களால் நடத்தப்பட்ட டிராமாத் தலைவிக்கு அனுப்பிய

கடிதம் ஒன்றில், தன்னையும் அவருடைய நாடகபாத்திரங்களி லொருத்தியாகச் சேர்த்துக்கொள்ளப் பிரியமிருந்தால், தன் குடும்பத்தினின்றும் தான் விலகி வந்துவிடுவதா யெழுதி யிருந்தனள். அதற்கந்த டிராமா தலைவி, மிகுந்த நல்லெண்ணத்தோடும் அமரிக்கையோடும் கொடுத்த பதிலால், அக்குடும்பப்பெண் நன்றாகச் சிட்சிக்கப்பட்டனள் என்பது எமது அனுபவத்தில் தெரிந்த விஷயம்.

இப்போதும் எத்தனையோ சிறுவர்களும் சிறுமிகளும் சிற்றின்பப் பாடல்களைக் கேட்பதற்கும், விடஸ்திரீ புமான்களின் சிருங்கார சேஷ்டைகளைக்கண்டு களிப்பதற்கும் நாடகம் பார்க்கச்சென்று அதே உத்தேசத்துடன் நாடகக் கொட்டகைக்கு வரப்பட்ட சில தூர்த்தர்களது சிருங்கார சேஷ்டைகளால் மயங்கி மதிகெட்டு வருந்துவதையும் காண்கின்றோம்.

இதல்லாமல் நாடகக்கொட்டகையில் நடக்கும் சில தூர்த்தர்களது சிருங்காரசேஷ்டைகளால், சில நற்குலப்பெண்டிர்களும் அகௌரவமாய் நடத்தப்பட்டு வீடுபோனதும் தம் பெரியாரால் தண்டிக்கப்படுவதையும் நாமறிவோம்.

இன்னும் நாடகக்கொட்டகைகளில் நடக்கப்பட்ட இதுபோன்ற துர்ச்செய்கைகளை யெழுதுவதென்றால் இறகுங் கூசுகின்றது. ஆயினும் என்னை! இவற்றையெல்லாம் கண்கூடாகப் பார்க்கின்ற சில பெரிய மனிதர்களும், தங்குடும்பஜனங்களோடு நாடகம் பார்க்கச் செல்கின்றனரே! ஆதலின் அதிகாரிகள் இந்நாடகம் நடத்த உத்தரவு கொடுக்கும் விஷயத்தில் அக்கரை யெடுத்துக்கொண்டு நல்வழிப்படுத்தினாலன்றி ஜனங்கள் தம் மதியால் சீருறுவது அரிதேயன்றோ.

தற்சமயம் வியாபாரம் முதலியவற்றின் குறைவால் வருவா யில்லாது வருந்தும் புதுச்சேரியில் இந்நாடகக் கம்பெனியார்களது சூழ்ச்சியால் ஜனங்களுக்கு நேர்ந்துவரப்பட்ட நஷ்டம் மிக வதிகம். இதைக் கஷ்டப்படும் ஜனங்களே உணராதது புதுவையின் தௌர்ப்பாக்கியமேயாம்.

எத்தேச ஜனங்கள் தங்கள் விவேகமிகுதியால் நன்மை யடையமுந்துவதில்லையோ அத்தேச அதிகாரிகள் அந்த ஜனங்களைத் தம்மதிகார வன்மையால் நல்வழிப் படுத்தல் வேண்டும்.

அங்ஙனமிாக, பலவிதத்தாலும் ஜனங்கள் கஷ்டப்படு மிக்காலத்து இப் புதுவையில் பல நாடகங்கள் ஏக காலத்தில் நடக்கும்படி, அதிகாரவர்க்கத்தினர் பார்த்துக்கொண்டிருப்பது உசிதமாகுமோ?

இதோபதேசி.

# பண்டைக்காலத்துத் தமிழ் மகளிர் வீரம்.

(வெண்டாமரை ௬, இதழ் ௫, 108-ம் பக்கத்தொடர்ச்சி.)

இம்மட்டோ, அவர் தம்மக்கள் செல்வம் பொருந்தி இருப்பதைப் பெரிதெனக் கருதாது,

"சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாங்வில் புலவர் வாயுள்"

நிற்பதையே மகிழ்வுடன் விரும்பினர். வடுக்கொள்யாக்கை இகழ்வுடன் நோக்கினர். வீரத்திற் பிழைத்து, படையினின்று ஓடி வீடு வந்த தன் சிறுவனைக் கண்டு அழுங்கிய மற்றொரு தாயின் கூற்றையும் இங்கு விடுக்கின்றேன்.

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ருருஞ்சம முருக்கி
யக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃகம்
மதன்முகத் தொழிய நீபோந் தனையே
யதனு, லெம்மில் செய்யாப் பெரும்பழிசெய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே!"

(தகடூர் யாத்திரை.)

(இ-ள்.) என் வயிற்றைக் கிழித்துக்கொள்கிறேன்! உன்னை யீன்ற அதைக் குறித்து நோவேன். ஒருப்படாத அரசர் வெகுண்டு புரியும் களத்து இறவாது பிழைத்து வந்தனையே! யானைத் திரள்களை எறிந்து வீழ்த்திய ஈட்டியினை அக்களத்தே போகவிட்டு நீ இங்கு வந்தனையே! இங்ஙனம் நம் குடியிற் செய்யாத இப்பெரும் பழியைச் செய்யத் துணிந்த கல்லாக் காளையைப் பெற்றெடுத்த இவ் வயிற்றைக் கிழித்துக்கொள்வேன் (எ-று.

வீரமற்ற காளை கல்லாக் காளையாம் என்று சொல்லியது இங்குக் கவனிக்கத் தக்கது. தோன்றிற் புகழுடன் தோன்றுக, அன்றேற் றோன்றாமை அதனினும் நன்று என்பதே அவர்கள் கொள்கையாக இருந்தது. பின்னும், அவர் கொள்கைகளைப் பொன்முடியார் இங்ஙனம் விவகரிக்கின்றனர்.

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!”

(புறநானூறு ௩௱கஉ.)

(இ-ள்.) பெற்றெடுத்துப் பாதுகாத்தல் என் முதற்கடமையாகும். நற்குணங்கள் நிரம்பப் பெற்றவனாக ஆக்குதல் தந்தையின் கடன் ஆகும். வேற்படை செய்து கொடுத்தல் கொல்லரைச் சார்ந்தது. திரண்ட (நல்ல) செல்வத்தைத் தருதல் மன்னனுக்குக் கடன். விளக்கமுற்ற வாட்களைப் போர்க்களத்திலே கெடுத்து யானைகளை வீழ்த்தித் திரும்புவது காளைக்குக் கடமையே யாகும் (எ-று.)

மகளிரின் வீரத்தை விளக்கும் செய்யுட்கள் பண்டை இலக்கியங்களில் மலிந்து கிடக்கின்றன. இவற்றையும், நமது சமூகத் தேர்ச்சிக்கு உரியபிறவற்றையும் தொகுத்து நம்மக்களுக்கு வழிகாட்டியாகச் சமைப்பது ஆசாரச்சீர்திருத்தம் செய்ய முன்வரும் பெரியாரின் முக்கிய கடன் ஆகும். இதைக் கவனியாது மேற்கு நாட்டார் (மேல் நாட்டார் என்று சொல்ல எனக்கு அருவருப்பாக இருக்கிறது.) ஒழுக்க முறைகளை அனுசரித்து நம் மகளிர் நடத்தல் ஒவ்வாதது என்பது நாம் சொல்வது ஒன்றேயன்றி ஒவ்வொரு உண்மையான ஐரோப்பியனையும் விசாரித்துப் பார்த்தால் தெற்றெனவிளங்கும் ஓர் உண்மை ஆகும்.

“ருடியர்ட் கிப்ளிங்” (Rudyard Kipling) எனும் கவிஞர் சொல்லியபடி “கிழக்கென்பது கிழக்கே. மேற்கு மேற்கே. கிழக்கும் மேற்கும் எவ்விதத்தும் ஒருப்படா.”

என் சகோதரிகளை முன்னிட்டு எழும் இச் சிறு வேண்டுகோட்கு அன்பர்கள் இரங்குவாராக. நம் சகோதரிகட்குக் கல்வி நலன், சிறப்பு முதலியவற்றை ஊட்டுங்கள். நம் சகோதரிகளது ஒழுக்க பழக்கங்களில் சீர்திருத்தங்களைச் செய்யுங்கள். ஆனால், அவையாவும், நம் சான்றோர் ஒழுகிச் சென்ற முறைகளைப் பின்பற்றியவைகளாக இருக்கட்டும். நம் சகோதரிகள் இடையில், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், பொன்னை உலையிற் பெய்து சோறாக்கிக் கொடுத்த பாரிமகளிர், எயிற்றியனார், பூதப்பாண்டியன் உடன்மாய்ந்த பெருங்கோப்பெண்டு, பண்பிற் சிறந்த பொத்தியார், மாறோக்கத்து நப்பசலையார், காமக்கண்ணியார், வெள்ளிவீதியார், நன்னாகையார் முதலிய சிறந்த மக்கள் தோன்றட்டும்.

கடியலூர்க் கயற்கண்ணி.

# மூவாதியார் அருளிச் செய்த ஐந்திணை யெழுபது.

## குறிஞ்சி.

(வெண்டாமரை ௬, இதழ் ௫, 116 - ம் பக்கத் தொடர்ச்சி.)

அ. வெறிகமழ் தண்சுனைத் தண்ணீர் துளும்பக்
கறிவளர் தேமா நறுங்கனி வீழும்
வெறிகமழ் தண்சோலை நாடவொன் றுண்டோ
வறிவின்க ணின்ற மடம்.

தோழி தலைமகனுக்குக் கூறியது.

(இ-ள்.) நறு நாற்றம் வீசுகின்ற குளிர்ந்த சுனையில் தண்ணீர் அலைபோன்று எழவும் மிளகுக் கொடி படர்ந்த இனிய மாவின் பழம் கீழ் வீழ்கின்ற மணம் கமழும் குளிர்ந்த சோலைகளையுடைய நாட்டனே! நின் மனத்தும் பேதைமை என்ப தொன் றுண்டோ ?

நினக்கும் பேதைமை என்பதுண்டோ யான் நவில வேண்டுவதும் உண்டோ என்றவாறு மனஞ்செய்து கொள்ளவேண்டும் என்பதை வற் புறுத்தினள். இவள் இங்குச் சொல்லாது விட்ட கருத்தினைச்சொல்லி முடித்தாள் மற்றொரு தோழி:

"பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்
ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செறாமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன் றல்
செறிவெனப் படுவது கூறியது மறாமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்—"

எனக் கலித்தொகையுள்.

௯. மன்றத் துறுகற் கருங்கண் முசுவுகளுங்
குன்றக நாடன் றெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் றலையளி
யொன்றுமற் றொன்று மனத்து.

தலைவி தோழியிடம் கூறியது.

(இ-ள்.) தோட்டங்களிலே செறிந்துள்ள கற்களிடையே கரிய விழிகளையுடைய குரங்குகள் பாய்ந்து விளையாடும் மலையக நாடன் என் மனத்தைத் தேற்றுவித்த அம்முறைமையை நல்லது, பிழையிதெனத் தேர்ந்தேன். அவன் என்னிடம் கூறிய உறுதிமொழி ஒன்று. அவ்வொன்றும் அவ் வண்ணம் நன்றே.

"யென்று மற்றென்று மனைத்து." என ஈற்றடியிற் பாடம்கொள்ளுவர் நச்சினார்க்கினியர். இதனை "நொந்து தெளி வொழிப்பினும்" (தொல்-பொருள்-களவி-கககக.) என்றவிடத்து உதாரணம் காட்டுவர். இப்பாடம் கொளின் "தலையளி யென்று தெளிந்தேன். இது இன்று மட்டும் அன்று என்றும் அனைத்தே" எனப் பொருள் கொள்ளுதல் ஆம். இது நச்சினார்க்கினியர் எடுத்த "நொந்து தெளிவொழிப்பினும்" என்ற சூத்திரத்திற்கு ஒத்ததே. உள்ளுறையைக் கவனிக்குமிடத்தும் முசுவினைத் தலைமகனுக்கு ஒப்பிடுங் காலையில் ஓர் நிலையில் நில்லாது எப்பொழுதும் திரிந்து விளையாடும் முசுவினைப்போல் பண்பென்பது இன்றிச் சூளுறவே கொண்டு திரிபவன் தலைமகன் என்ற பொருள் கிடைக்கும்.

நான் கொண்ட பாடம் பழைய உரையாசிரியரின் கருத்தைத் தழுவியது.

௧௦. பிரசங் கொளவீழ்ந்த தீந்தே னிறாஅல்
மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்
வரையக நாட வரையா வரினென்
னிரைதொடி வாழ்த லிலள்

தோழி கூறியது.

(இ-ள்) தேனைப் பிறர் கொள்ளுமாறு விழுந்த தேன்கூட்டினைப் பெண்மான் கன்று தன் குளம்பால் சிதைத்துச் செல்லும் மலைநாட்டுத் தலைவனே! நீ மணந்து கொள்ளாது இங்ஙனம் களவொழுக்கம் மேற்கொண்டு மணந்து கொள்ளாது வரின் எங்கள் பெண் உயிர்வாழாள்.

தீந்தேனிறாஅலினை மரையான் கன்று வீணே சிதைத்துச் செல்லும் நாட்டுத் தலைவன் என்றது, தலைவியின் நலத்தை வரைந்து அனுபவித்தல் அறியாது வீணில் கெடுக்கிறான் என்பது குறிக்க.

௧௧. கேழ் லுழுத கரிப்புனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்தயருந்
தாழருவி நாடன் றெளிகொடுத்தா னென்றோழி
நேர்வளை நெஞ்சூன்று கோல்

தோழி கூறியது.

(இ-ள்.) பன்றிகள் இரைதேடித் தம் கொம்பினால் உழுத கரிந்த புனக் கொல்லையுள் ஆண் குரங்குகள் வாழையின் முதிர்ந்த காயைப் புதைத்து அதனை யிழந்த காரணத்தாலே சோர்ந்து நிற்கும் தாழ்ந்த அருவிகளையுடைய நாடன் நேர்மையான வளைகள் பூண்ட என் தோழியின் நெஞ்சத்திற்குத் தெளிவுறும் வண்ணம் ஓர் ஊன்றுகோலாகத் தன் உறுதிமொழியைக் கொடுத்தான்.

இங்கு "வாழைமுதுகாய் கடுவன் புதைத்தயருந் தாழருவி நாடன்" என்றது, தோட்டக்காரர்கள் வாழையைப் பயிரிடுவதுபோல் தானும் செய்யக்கருதிக் காயைப் புதைத்துப் பின்னர் அதனை இழந்ததனாலுண்டாகிய வருத்தம் மிகுந்து அயர்ந்து நிற்பதுபோல், மற்றைய ஆண்மக்களைப்போலத் தானும் ஓர் ஆண்மகன் எனக் கருதிச் சபதமிட்டுச் சென்றவன் பொய்த்தனன் என்பது காட்ட.

இதனை, "செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்" (தொல் பொருள்-களவி-கக௪.) என்றதற்கு உதாரணங் காட்டுவர் நச்சினார்க்கினியர். இஃது அவன் சூளுறவு பொய்த்ததென இயற்பழித்தது என அதனை விளக்குவர்.

கஉ. பெருங்கை யிருங்க ளிறைவன மார்ந்திக்
கருங்கான் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து.

தலைமகள் கூறியது.

(இ-ள்.) பெரிய கைகளையுடைய கரியநிற வண்டுகள் இறைவனத்து நெல்லைத்தின்று கரிய அடிப்புறத்தையுடைய மரங்கள் அடர்ந்த பூஞ்சோலையின் பசுநிழலில் உறங்கும் வண்டுகள் ஒலிக்கும் சோலை சூழ்ந்த மலைநாடனது நட்பு பொருந்தப்பெற்றார்க்குப் பெருங்களிப்பைத் தருவதாகும்.

இங்கு வண்டுகளைத் தலைவனிடமாக வைத்துக் கூறியது, "வண்டோரனையர் ஆடவர்" என்ற அகப்பொருள் துணிவைக்கொண்டு. தலைவன் வண்டுகள் போன்று தன் மனப்படி போகங்கொண்டு நிலையின்றித் திரிந்து செல்பவன் ஆயினும் என்பேதைமையாலும், என் மனத்தூய்மையாலும் அவன்மாட்டுக் களிப்பெய்துகிறேன் என்றாள். அகப்பொருள் விளக்கவுரைகாரரும் இம்முடிவினை "வண்டோரனையர் ஆடவர் பூவோர் அனையர் மகளிர் என்பது என்னை? வண்டுகள் தாதூது மிடத்து நன் மலரையே ஊதுவே மென்னா: எல்லாப் பூவையும் ஊதும் அன்றே.

இனிப் பூ அவாவினக்கால் எம்மையே ஊதா எல்லாப் பூவையும் ஊதினை வென்று புலவாதன்றே—" என விளக்குவர்.

இதனை நச்சினார்க்கினியர் தோழிமேன கிளவி என்பர். "என்பு நெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ = யன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணும்" (தொல் - பொரு - களவி - ககச.) என்றதற்கு உதாரணங் காட்டுவர். இது இயற்பட மொழிந்து வற்புறுத்திய தாகும்.

கரு. ... ... ... ... ...
... ... ... ... ...
யார்வத்தி னார முயங்கினேன் வேலனு
மீர்வ... வித்தான் மறி.

[இப் பாடல் முழுவதும் சரியாகக் கிடைக்க வில்லை. இதற்குப் பழைய உரையாசிரியர் எழுதியுள்ள உரை மாத்திரம் இங்கு எழுதப்படு கிறது.]

"(என்பது) வெறியாட் டெடுத்துக் கொண்ட விடத்துத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது.

(இ-ள்.) நீண்ட கதிரினையுடைய பசுந்தினையை வளைவாய்க் கிளியினங் கவரு நீரானே தெளிந்து திகழாநின்ற சோலைகளை யுடைய நாடன் கேண்மையைக் காதலனே னிரம்ப மேவினேன். பிரித லாற்றே னாயினேன். அவ் வாற்றாமை தெய்வத்தி னாயதென்று முருகற்கு மறியை யறுக்கத் துணிந்தான் வேலோன். தோழி யிதனை விலக்கு வாயாக!

கசு. குறையொன் றுடையேன்மாற் றோழி நிறையில்லா
மன்னுயிர்க் கேமஞ் செயல்வேண்டு — மின்னே
யரவழங்கு நீள்சோலை நாடனை வெற்பி
லிரவாரா லென்ப துரை.

தலைமகள் கூறியது.

(இ-ள்.) தோழி! உன்னால் ஆகவேண்டிய காரியம் ஒன்று உடையேன். உறுதிப் பாடற்று நிற்கும் என் உயிருக்கு இப்பொழுதே ஒரு காப்புச் செய்தல் வேண்டும். பாம்புகள் உலவுகின்ற நீண்டசோலைகளையுடைய நாடனை நம் மலைப் பக்கம் இரவில் வரவேண்டா என்பதைச் சொல்!

பாம்பினைக் குறிக்கும் 'அர' என்பது ஆகுபெயராக அது ஈனும் விஷத்தையும் குறிக்கும். "இரவினானு மின்றுயி லறியா=தாவுறு துயர மெய்துப —" (ஐங்குறுநூறு கஉரு) என்ற இடத்து 'அரவு'

என்றது விடத்தைக் குறித்து நின்றாற் போல. இப் பொருள் கொள் ளின் "அரவுழங்கு நீள்சோலை நாடன்" என்றது விஷத்தை யூட்டும் நீள்சோலை நாடன் என்பது கிடைக்கும். விஷமாவது விஷத்தையொத்த அவன் ஒழுக்கமும் மொழிகளும். இதனை இவ் வைந்திணை யெழுப தாசிரியரே "நச்சுப்பணி யுண்டேனே மேனு ளோர் = பொய்ச்சு ளொன வறியா தேன்." (௫௦) எனப் பாடுவர். பணி என்றது பணி மொழிகள்.

இசனைப் "பொழுதும் ஆறும் புரைவது அன்மையின் = அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்" தொல் – பொருள் – களவி – ௧௧௧) என் றவிடத்து உதாரணமாகக் கூறுவர் நச்சினார்க்கினியர்.

குறிஞ்சி முற்றும். (தொடரும்)

ரா. வாசுதேவ் சர்மா,
புதுவை.

## கொல்லாமை.

கொல்லாமையாவது உயிர்களை அவைகளுக்கு இடமாகிய உடம்பி னின்றும் பிரியச் செய்யாமை. உலகத்தின்கண் உண்டாகிய தோற்றம் தாவரசங்கமங்களென இருவகைப்படும். அவைகளுள் தாவரங்களினுஞ் சங்கமம் அறிவினுயர்ச்சியினாலே மேம்பட்டது. அச் சங்கமங்களுள்ளும் அறுசுவைப் பதார்த்தங்கள் திவ்வியாமுதமாகிய போசனங்கள் முதலிய வைகளை அறிந்து புசித்தலும் மஞ்சத்தின் கண்ணே பஞ்சுபெய்த மெத் தையின்மேல் தலையணை முதலியவைகளைப் பரப்பிப் பட்டுவிதானத்தின் கீழ் நித்திரை செய்தலும், சுகாதிகளை யனுபவித்தலும், நாணமுடைமை யும் மனைவிசாமிகையால் அஞ்சியகாலையில் மனந்தேறி அதற்கேற்ற உபாயஞ் செய்து அத் துயரை யொழித்தலும் மனிதர்களேயாகையால், அவர்களே அறிவினுயர்ச்சியில் மேம்பட்டவர்கள். அம்மனிதர்களுள்ளும், சரீர வாழ்க்கை அநித்தியம். இதனை நாம் காப்பதற்கு எண்ணுதல் நீர்க் குமிழிக்குப் பூண் கட்ட நினைத்தலை யொக்கும். ஆன்மா நித்தியம், கொலை பண்ணுமிடத்து அக்கொலைப் பாவமானது, அவ் வான்மாவை அநேக காலந் தொடர்ந்து வருத்தும். ஆதலின் இச் சரீரத்தை நெடுநாள் வருத்துவதொரு கொலையைச் செய்தல் தன்னுயிர்க்கே தீங்கிழைத்தலின் அதுவுங் கூடாதென்றும், நமக்கோர் சீவனாலே சரீர ஆனி வருமிடத்தும் அதனுடைய சரீரத்துக்கு ஓர் கெடுதலுஞ் செய்தல் கூடாதென்றும், அச்சீவனுக்கு வேறு எவ்வித கெடுதி நேரினும் அக்கெடுதி நிகழாவண் ணம் காப்பாற்ற வேண்டுமென்றுங் கருத்துடைய குற்றமற்ற பெரி யோரே அறிவினுயர்ச்சியின்லே மேம்பட்டவர்களாவார்கள்.

ஆனால் கொலையால் வருங் கெடுதிகள் யாவையெனின், ஒருவன் செய்யுந் தீவினையாகிய ஒருருவிற்கு அக்கொலையே பிரதானமான சிரசெனப்படும். அஃது எத்தாலெனின் உயிர்கட்கு இன்பஞ் செய்தலே புண்ணியமும் துன்பஞ் செய்தலே பாவமுமெனத் தரும நூல்களெல்லாங் கூறுதலினால் கொலைமைக்கு மேம்பட்டபாவம் வேறொன்றுமில்லை. ஆகையால் பாவங்களுக்குக் கொலைமையே முதன்மையாயிற்று. ஆகவே கொல்லாமையே புண்ணியங்களுக்கெல்லாம் முதன்மையென்பது பெற்றும். ஆனால் கொலைப்பாவத்தால் வருங் கெடுதி யாதெனின், நெடுநாள் நீங்குதற்கரிய துன்பமேயாம். அத்துன்பத்தைக் கொலை செய்த ஒருவன் உடனே அனுபவிக்கக் கண்டிலோமேயெனின், வேளாண்மை செய்தோனுக்கு அதன் பலனனது நாளடைவிலே புசிப்புமாய் மேலைக்கு வித்துமானதுபோல, அக்கொலையாளியுஞ் சரீராந்தத்தில் நரகடைந்து துயருற்றுப் பின்னர் நரக சேடத்தாற் பூமியின்கட்டோன்றித் துக்கங்களை யனுபவிப்பன். இவ்வாறாய துன்பமுண்டு என எவ்வாறு நிச்சயிக்கலாமெனின், விஷமுண்ட ஒருவனை அவ்விஷமானது வருத்திக் கொல்லுதற்கு முன்னர் நெடிவு தோன்றுதல்போலவும், நெருப்பினுற் சூடுண்ட ஒருவனுக்கு அது புண்ணாவதற்கு முன்னமே எரிவு உண்டாதல் போலவும் சிவத்துரோகாதி அதிபாதகமும் பிரமகத்தியாதி மாபாதகமும் மறுமைக்கண் எரிவாய் நரகத்தில் வீழ்த்துதற்கு முன்பே சித்தப்பிரமையாதி துன்பங்களும் பிரமகத்தியாதி துக்கங்களும் அடைதல் போலவும், ஒருவன் செய்த வலிய தீவினைகளானவை மறுமைக்கண்வந்து நரகத்தில் அழுத்துமாயினும் இம்மையிலும் வருத்துவதாகிய தம்முடைய வேகத்தைக் காட்டுமென்று மறைமொழிகள் கூறவும், அவ் வுரையின்படியே அப் பாவத்தின் வேகமானதை அப் பாவஞ் செய்த ஒருவனை வருத்தக் காணுதலினாலும் மறுமைக்கண் நரகத்தில் அழுத்தி வருத்துமென்பது பெற்றும். ஆனால் இம்மையிற் பாவங்களைச் செய்தவன் இறந்துபோகவும் அவனைத் தகனம் பண்ணிவிடக் காண்கிறோம். அப்பொழுது அவன் சரீராந்தத்தில் எவ்வாறு நரகத்தை யனுபவிப்பானெனின், சரீராந்தத்தில் பாவப்பருவமானால் பூததேகமும் புண்ணியப் பருவமானால் பூத சார தேகமும் கணப்பொழுதினுள்ளே பெற்றுச் சுகதுக்கத்தை யடைவன் என்பதாம். அவ்வாறடைவது குற்றஞ்செய்தோன் தப்பிப் போகக் குறுக்கே வந்தவனை அடித்தது போலவும், ஒருவன் பசிக்கு மற்றொருவன் உண்டதைப்போலவும் இம்மையிலே இச்சரீரம் செய்த பாவத்துக்குச் சரீராந்தத்தில் உண்டாகிய சரீரம் வதைப்படும் என்றது சரியல்லவே, இதற்கும் அதற்கும் சம்பந்தம் ஏது என்றால்,

லெமனேட் பவுடர்:—இச்சூரணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதி உத்தமமான லெமனெட் தயாராகிவிடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப்போதுமானது. விலை சீசா 1-க்கு அணா 6, வி. பி. சிலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பன்னீர்:—இப்பன்னீர் ½ அவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை 3 பெரிய சீசா வெந்நீருடன் கலந்தால் முதல்தரமான 3 சீசா பன்னீராகும். மேன்மையான பன்னீர் விலை சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

தஞ்சாவூர் மசாலா பவுடர்:— ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான கலவைபவுடர். சைவாளும் மாம்ஸதாரிகளும் குழம்பு, கறி, துகையல் முதலிய இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதைக் கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்கினிமாந்தம் அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம்மசாலாவை சேர்த்துசெய்தசமையலின் மனோரம்மியமானவாசனை வீடுமுழுவதுமட்டுமல்ல, வெளியில் சுற்றுப்பக்கங்களிலும் பாவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொரு தடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி-பி-சிலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY.

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy

TANJORE.

அக் காரியம் சித்தி பெறும்வரையில் மீண்டுமீண்டும் விடாது முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்யின் அக்காரியம் கைகூடுவது நிச்சயம். முயற்சியினால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. இதுபற்றியே நம்மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார், "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" எனவும், "ஊக்கமது கைவிடேல்" எனவுங் கூறினார். இடையில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சி மனதைத் தளரவிட்டவர்கள், தாம் தொடுத்த கருமத்தை ஒருபோதும் செய்து முடிக்கமாட்டார்கள்.

ஒவ்வொருவருக்கும், காரியத்தைக் கெடுத்தலில், சோம்பலைப் போன்ற பகை வேறொன்றுமில்லை. ஆதலின் அச் சோம்பலை ஊக்கமென்னும் தடிகொண்டடித்து ஓட்டி, நாம் மேற்கொண்ட கருமத்தை முற்றுப்பெறச் செய்தல்வேண்டும்.

இதற்கு மாறாகச் சிலர் மனத்திடமின்றி, கருமங்களைச் சரிவர நிறைவேற்றாமல், தங்களுக்கும், பிறர்க்கும் யாதொரு பயனுமில்லையாக, அக்காரியத்தை அரை குறையாக விட்டதினால் அவமானமுமடைந்து, வாளாகிடந்து மயங்குகின்றனர். மற்றும் சிலர், எல்லாம் விதிப்பயனென்றும், அதிர்ஷ்டமிருப்பின் எல்லாம் தானேவருமென்றும், வீணான பின்னடையும் யோசனைகளைச் செய்து, "தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்னும் உண்மையை யறியாமல், முயற்சியைக் கைவிட்டு, சோம்பலுற்று வறுமையடைந்து வருந்துகின்றனர். அந்தோ! இவர்கள் அறியாமை இருந்தவா றென்னே! இவர்கள், விதியை மதியால் வெல்லலாமென்பதைச் சிறிதும் அறியார் போலும். விதியை மதியால் வென்ற மார்க்கண்டேயரைப்பற்றி, குமாரகுருபரசுவாமிகளும் தாம் திருவாய்மலர்ந்தருளிய நீதிநெறி விளக்கத்தில்,

"உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி"

என்று செப்பியுள்ளாரே. மார்க்கண்டேய முனிவர் யமனை வென்று எஞ்ஞான்றும் பதினாறு வயதினராயிருக்கும் பாக்கியத்தைப் பெற்றதற்குக் காரணம், அவரது விடாமுயற்சியன்றோ! அமரர்களாலும் அடைய முடியாத பெரும் பேற்றைத் துருவன் என்னும் சிறுவன் அடைந்தது எதனால்? அவனது விடாமுயற்சியினாலன்றோ! அமெரிக்கா என்னும் புதிய கண்டத்தைக் கோலம்பஸ் என்பவன் கண்டுபிடித்தது அவனது விடா முயற்சியினாலன்றோ! இடையில் இவர்கட்கு நேர்ந்த துன்பங்கள் எவ்வளவு! அவற்றிற்கெல்லாம் இவர்கள் சிறிதும் அஞ்சினார்களோ?

அஞ்சித் தங்கள் முயற்சியைக் கைவிடின், அவர்கள் அப்பயனை அடைந்திருப்பார்களோ? ஒருபோதும் அடைந்திரார்கள். ஆகலின், மக்களாகப்பிறந்த ஒவ்வொருவரும் நல்வழியில் நின்று, இடையூறுக ளெவற்றிற்கும் அஞ்சாமல் விடாதுமுயன்று, எடுத்தகருமத்தை இனிது முடித்துப் பயன் பெறுவார்களாக.

மேலும் நமது கலைமகள் பத்திராதிபர் ஸ்ரீமான் பங்காருப்பத்தரவர்கள், கலைமகளுக்குச் சந்தாநேயர்களின் தொகை மிகக் குறைவாயிருந்தும், எப்படிக்கேனும் அதனை அபிவிர்த்தியடையச்செய்யவேண்டுமென்று ஊக்கங்கொண்டு உழைத்து வருவதுபோல், தமிழபிமானிகளாயுள்ள ஒவ்வொருவரும், தாங்கள் சந்தாநேயர்களாயிருப்பதுமன்றி, தங்கள் நண்பர்களையும் சேர்த்துத்தந்து, நமது கலைமகள் இனிது வாழ முயற்சி செய்யும்படி வேண்டுகின்றேன். நானும் அங்ஙனமே செய்ய முயல்கின்றேன். அதுபற்றியே முயற்சியென்னும் விஷயத்தை முதல் முதலாக இப்பத்திரிகையி லெழுதலானேன்.

S. V. நம்மாழ்வார்,
விவேகாநந்த வித்யாசிரமம், சேலம்.

---

## பலசரக்குக் கடை.

### நாய்ப் படை.

சண்டையில் நாய்களைச் சேகரித்துத் தயார் செய்யப்படுகின்றன. அவைகள் மிலிட்டரி உடைகள் தரித்திருக்கின்றன. அவைகள் பழக்கப்பட்டதினின்றும் அநேக யுத்தவேலைகள் செய்கின்றன. கொடிபிடிக்கின்றன. விளக்குகள் தூக்கிச் செல்கின்றன. சத்துருவையும் நேசக்கட்சியாரையும் அடையாளம் கண்டுபிடித்துச் சத்துருக்களை விரட்டுகின்றன. ஸிவிலியர், போர்வீரர் வந்தால், அவர்கள் தங்கள் அடையாளங்களைக் காட்டாவிடின், உள்ளே பிரவேசிக்கவிடாமல் மேலேவிழுந்து பிடுங்கிவருகின்றன. வீரர்கள் வந்ததும் வந்தனம் செய்கின்றன. பதில் வந்தனம் செய்யாவிடில் விரட்டுகின்றன. சேனாதிபதி உத்தரவிட்டதும் அதன்படிநடக்காமல் தாமதித்திருப்பவர்களை விரட்டுகின்றன. பிரிட்ஷ் எனப் பெயர்கொண்ட ஒருநாய் தன்னைக் கெடுதலான மாறு பெயரிட்டழைத்த ஒரு ஸிவிலியனைப் பிடுங்கிவிட்டது. சில மிக்க பலத்துடன் வண்டியிழுக்கவும், துப்பாக்கி சுமந்து செல்லவும், மற்றும் பலவேலைகள் செய்யவும் உபயோகப்படுகின்றன. லோக்ஞகென்னல் என்ற பங்களாவில் அவைகள் வருஷத்திற்கு 15 நாள் விடுமுறை பெற்று இளைப்பாறி வருகின்றன.

## சவரன்களின் விலை.

ஐக்கிய இராச்சியத்தில் அனுசரிக்கும் முறையைப் பின்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், சவரன்களும், தங்க மோகராக்களும் கடன்கொடுத்துக் கடன் வாங்கும் விஷயங்களில் 15 ரூபாய்க்குமேலாக விற்கப்படக் கூடாதென்று ஒரு விதி பிறப்பித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக இனிச் செய்யப்படும் உடன்படிக்கைகளெல்லாம் செல்லாவென்றும், இவ்விதிக்கு மீறி நடப்பவர்கள் நியாய தண்டனைக் குட்படுவார்களென்றும் கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கின்றனர்.

*
* *

## மனித எலி.

கல்கத்தாவில் ஒரு லாலா தனது பட்சணக்கடையில் நாள்தோறும் இராக்காலத்தில் தின்பண்டங்கள் திருட்டுப்போவதைக் கண்டு, கடையில் பெரிய எலிப்பொறி யொன்று வைத்தான். எலிப்பொறி வைத்த முதல் தினத்தில், வழக்கம்போல் பட்சணங்களைத் திருடப்போன ஒரு மனிதன் எலிப்பொறியில் அகப்பட்டுக்கொண்டு கூச்சலிட்டான். லாலா ஓடிவந்து அவனைப் பிடித்துப் போலீசார் வசம் ஒப்புவித்தான்; அவனுக்கு அக்குற்றத்திற்காக 3-மாதம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

*
* *

## தீக்குச்சித் தொழிற்சாலை.

கொழும்பு நகரில் தீக்குச்சி செய்யும் தொழிற்சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது அந்தச் சாலைக்குரிய யந்திர சாதனங்களெல்லாம் ஜப்பானிலிருந்து வந்துவிட்டன. சமீப காலத்திலேயே அச்சாலையிலிருந்து தீக்குச்சிப் பெட்டிகள் விலைக்கு வந்துவிடுமென்றும், இதர இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டு விற்பனையாகும் பெட்டிகளைவிட மலிவாயிருக்குமென்றும் சொல்லப்படுகின்றது.

*
* *

## ஜந்துக்களால் நேர்ந்த மரணம்.

சென்றவருஷத்தில் இந்தியாவில் 2400-பேர் பாம்புகடித்து மாண்டனர்; 2000-பேர் காட்டு மிருகங்களால் இறந்தனரென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இம்மிருகங்களுள் புலிகளால் 1000-பேரும், சிறுத்தைகளால் 300-பேரும், ஓநாய்களாலும் கரடிகளாலும் 280-பேரும், யானைகளாலும் கழுதைப் புலிகளாலும் 80-பேரும் இறந்தனரென்று தெரிகின்றது. 84000 பாம்புகளும், 1200 புலிகளும், 9000 சிறுத்தைகளும், 2000 கரடிகளும், 2200 ஓநாய்களும் வேட்டைக்காரர்களால் கொல்லப்பட்டன. அவர்களுக்குக் கவர்ன்மெண்டார் தக்க பரிசளித்திருக்கின்றனர்.

# COCOANUT BUTTER OR COCOTINE.

## தேங்காய் வெண்ணெய்

அல்லது

# கொக்கொட்டின்.

இது கை படாமல் யந்திரத்தின் உதவியினால் தேங்காயிலிருந்து செய்யப்பட்டது.

சமையலுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு வருகிற நெய், கொழுப்பு, வெண்ணெய் முதலிய பதார்த்தங்களுக்குப் பதிலாக, மிகவும் சுத்தமாயுள்ள கோக்கோட்டின் என்ற தேங்காய் வெண்ணெயை நன்றாய் உபயோகப்படுத்தலாம்.

1917, 1918-ல் நடந்த மதராஸ் கைத்தொழில் காட்சியில் கோக்கோட்டின் உயர்ந்த தன்மையுடையதென நற் சாக்ஷிப் பத்திரம் கொடுக்கப்பட்டது.

விலை முதலிய விபரங்களுக்கு அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பெஸ்ட் அண்டு கம்பெனி லிமிடெட்

மதராஸ் அண்டு புதுச்சேரி

பல கண்காட்சிகளில்

மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

---

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து

இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக்காண்பியுங்கள்.

---

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

### கஸ்தூரிகலந்த லாவண்டர் வாடர்.

எங்களுடைய அவுஷதசாலையில் தயாராக்கப்பட்ட மிகவும் சுகந்த திரவியம். சீர்மையிலிருந்து வரவழைத்து விற்கிற வஸ்துவல்ல. எப்பேர்க்கொத்தவர்களையும் மயக்கக்கூடிய சுவாசனை. வஸ்திரங்களுக்கு உபயோகித்தால், இன்பமான சுகந்தத்தை தரும். இந்த சுகந்தத்தை 4 துளிகள் உபயோகித்தால், கடைகளில் சாதாரணமாக விற்கும் லாவண்டர் வாட்டரை 20 துளிகள் உபயோகித்தால் எம்மாத்திரியான சுகந்த மிருக்குமோ அதைவிட ஜாஸ்தியாக எம்முடைய லாவண்டர் வாட்டர் மனோரம்மியமான சுவாசனையை வீசும். உபயோகித்தவர்களைச் சுற்றி வெகுநேரம் பரிசுத்தமான பரிமளத்தைப் பரவச்செய்யும். $\frac{1}{2}$ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

### ஒடிகோலோன்.

இது சீர்மையிலிருந்து வரவழைத்ததல்ல. எங்களுடைய அவுஷதசாலையில் எங்களால் சுயமாகத் தயாராக்கப்பட்டது. மனக்களிப்பை உண்டாக்கக்கூடிய சுவாசனை உடம்பில் பூசலாம். வஸ்திரங்களுக்குப் போடலாம். இதை உபயோகித்தால், தலைவலி குணமாகும், தேகசிரமத்தை ஆற்றும், வெகுநேரம் வாசனைதங்கி

உபயோகித்தவர்களைச் சுற்றி வாசனை பரவியிருக்கும். சாதாரணமாய் தண்ணீர் கலந்து கடைகளில் விற்கும் சரக்கைப்போல் இல்லாமல், இது ஒரு சுயமான வாசனைக் கலவை. கடைகளில் விற்கும் ஒதிகோலோன் 10 துளி உபயோகிக்குமிடத்தில், எம்மால் செய்து விற்றுவரும் ஷை ஒதிகோலோனை 2 துளிகள் உபயோகித்தால் போதுமானது. ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது, விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

உடுப்புகளுக்குப்போடும் சுவாசனைத் திரவியங்கள்:— மனமோகினி, மனோரஞ்சன், ஜெகன்மோஹினி, மதன விலாசம், அக்பார் சிருய், ஷாஜிஹான் சிருய் என 6 வகையான வாசனைகளிருக்கின்றன. இவை [illegible]களில் ஒவ்வொன்றும் இப்பொழுதே மலர்ந்த புஷ்பங்களின் [illegible] வாசனை யுடையவைகள். வகை 1-க்கு சீசா 1-க்கு அணா 8. வி.பி. சிலவு 1 மு[illegible]ல் 6 சீசாக்கள் [illegible]யில் அணா 5 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் மசாலா பவு[illegible]— ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண் [illegible] செய்யப்பட்ட மனோரம்மியமான கலவைபவுடர். சைவாளும் ம[illegible]ஸதாரிகளும் குழம்பு, கறி, துவையல் முதலிய இன்னும் எல்லா வி[illegible] சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசியைக் கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்னிமாந்தம் அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம்மசாலாவை சேர்த்துசெய்த சமையலின் மனோரம்மியமான வாசனை வீடுமுழுவதும் மட்டுமல்ல, வெளியில் சுற்றுப்பக்கங்களிலும் பரவும். இதைப் பிராமணர்களும்மற்றவர்களும் யாதொருதடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி-பி-சிலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,
AYURVEDIC PHARMACY,
Sri Venkatesa Perumal Koil Sannathy
TANJORE.